தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

## இதழின் உள்ளே...

☆ ஆசிரியருரை
☆ உலக அளவில் பிரசித்திபெற்ற J.C.சோட் அவர்களின் செய்தி
☆ பெண்களுக்கான பகுதி
☆ சிறுவர்களுக்கான பகுதி
☆ வேத அறிவுப் போட்டி
☆ நாதன் அவர்களின் சரித்திர ஆய்வு
☆ நாளும் நடப்பும்

ஆசிரியர்
B.அர்ஜுனன்

மரம் 7 2007 செப்டம்பர் கனி 10

# அந்தியோகியா—ANTIOCH

**வேதத்தில் இரண்டு அந்தியோகியா பட்டணம் உள்ளது.**

1. **சீரியாவிலுள்ள அந்தியோகியா பட்டணம்.** இது கி.மு 33-ம் வருஷத்தில் கட்டப்பட்டது. இது எருசலேமிலிருந்து 300 மைலுக்கப்பாலிருந்தது. துவக்கத்தில் இது கிரேக்க ராஜாக்களின் தலைநகரம் பிற்பாடு ரோம தேசாதிபதிகள் இங்கே தங்கினார்கள். பவுலின் நாட்களில் இது ரோம ராஜ்யத்தின் மூன்றாம் பட்டணமாயிருந்தது. இங்கேதான் முதல் முதல் புறஜாதிகளுக்கென்று கிறிஸ்துவின் சபை ஆரம்பமானது. மேலும் சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கலாயிற்று. பவுல் தன்னுடைய மூன்று சுவிசேஷப்பயணத்தின் போதும் இங்கிருந்தார். (அப்.11:19; 11:22,26; 13:1; 15:35).

2. **பிசிதியாவிலுள்ள அந்தியோகியா.** இது செசரியாவென்றும் அழைக்கப்பட்டது. பவுல் இந்த இடத்தை மூன்று முறையும் சந்தித்ததாக தெரிகிறது. (அப்.13:14; 14:19; 14:21; 2தீமோ.3:11)

*S.Rajaprasath*
*Madurai*




"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15
"The Churches Of Christ salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# திவேர்ட் ஆப் கிறைஸ்ட்

## THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 7 செப்டம்பர் – 2007 கனி – 10


ஆசிரியருரை

# பாவமும் அதன் விளைவும்

## Sin & it's Consequences



"ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று" என்று வேதம் போதிக்கிறது (ரோம.5:12). இந்தப் பாவம் எப்படிவந்தது? என்ற கேள்வி எல்லோருக்கும் எழும்புகிறது. பாவம் இச்சையினால் வந்தது. ஆதாமும் ஏவாளும் விலக்கப்பட்ட கனியை இச்சித்து புசித்தபடியால் பாவம் அவர்களுக்குள் வந்தது. இச்சை பிசாசினால் உண்டானவை என வேதம் நமக்குப்போதிக்கிறது. "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்" (1யோவா.2:16). இந்த பாவம் எப்படி மனுஷனுக்குள் வந்தது? கண்களின் இச்சையினாலே ஆதாமும் ஏவாளும் தேவனுடைய எச்சரிப்பை மீறி விலக்கப்பட்ட கனியை பறித்து புசித்து பாவத்திற்குட்பட்டனர். ஆகையால், "மரணமானது ஆதாம்முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது; அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்" (ரோம.5:14). இந்த பாவத்தின் விளைவால் மனுஷனுக்கு என்ன வந்ததென்றால், மரணம் வந்தது. அதே வேளையில் கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே வந்தது. "பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது" (ரோம.5:21). இச்செய்தியை கேட்கிற நீங்களும் நானும் இந்த கிருபைக்கு கீழ்ப்படிவோமானால் மரணத்துக்கு விலகி பாதுகாக்கப்படுவோம்.

"அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்" (ரோம.6:11). கிறிஸ்துவின் கிருபையுள்ள சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தவர்கள் ஞானஸ்நானத்திலே பாவத்திற்கு மரித்தவர்களாக,

தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி அவரில் நிலைத்திருக்கிறார்கள். நீங்கள் அப்படிப்பட்டவர்களாக இருப்பீர்கள் என்றால், "இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்" என்று பவுல் எழுதுகிறார் (ரோம.6:6). நீங்கள் சிலுவையில் பழைய மனுஷனையும் அவனுடைய செய்கைகளையும் அறைந்திருக்கிறீர்களா? அப்படி அறையவில்லை என்றால் இன்றே பழைய மனுஷனை சிலுவையில் அவரோடு அறைந்து கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய மனுஷனாக இருக்கப் பிரயாசப்படுங்கள். "மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே" என்று வாசிக்கிறோம் (ரோம.6:7). மேலும், "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே" என்கிறார் பவுல் (ரோம.8:2). பாவத்தின் கீழாக அடைபட்டிருந்தவர்களை கிறிஸ்துஇயேசுவின் ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் விடுதலைசெய்கிறது. எப்பொழுது என்றால், அதற்கு ஒரு மனிதன் கீழ்ப்படியும்போது. "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" (ஏசா.59:2). பிசாசு கொண்டுவந்த பாவத்தின் விளைவால் மனிதன் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டான். அந்த பாவம் அவனுக்குள் இருக்கும் வரை அவன் தேவனிடத்தில் மன்றாடும்போதெல்லாம், தேவன் அவனுக்கு செவிகொடாதபடி அந்தபாவம் அவருடைய முகத்தை மறைக்கிறது.

யாரெல்லாம் பாவத்திலே விழுகிறார்கள்: தேவனை அறியாதவர்கள். "பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்" (1யோவா.3:8). தேவ எச்சரிப்பைப் பெற்றும் கீழ்ப்படியாதவர்கள் பாவஞ்செய்கின்றனர். எடுத்துக்காட்டாக பார்ப்போமானால். ஆதாமும் ஏவாளும் தேவனால் எச்சரிக்கப்பட்டும் விலக்கப்பட்ட கனியைப்புசித்து பாவத்திற்குள்ளானார்கள். "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதி.2:16,17). இதை அறிந்தும் விலக்கப்பட்ட கனியைப் பறித்து புசித்து பாவம் செய்தனர். அதைப்போல, தாவீதை நாம் அறிவோம், அவன் இஸ்ரவேலின் இரண்டாவது ராஜா. தேவன் இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுலின் ராஜ்யபாரத்தை பிடுங்கி தாவீதுக்கு கொடுத்தார். தாவீதோ மோசேயின் பத்துக்கட்டளையில் சொல்லப்பட்ட 'பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக' என்ற கட்டளையை அறிந்த இவர் அக்கட்டளையை மீறி உரியாவின் மனைவியை இச்சித்து எடுத்து பாவத்திற்குட்பட்டார். புதிய ஏற்பாட்டுக்கு வருவோமேயானால் அனனியா சப்பீராளைக்குறித்து படிக்கிறோம். இருவரும் முதல் நூற்றாண்டு கர்த்தருடைய சபையிலே அங்கத்தினராயிருந்தனர். காணியாச்சிகளை விற்றதில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து இருவரும் ஒரே விதமாக பொய்சொன்னார்கள். இதனால் அப்போஸ்தலனாகிய பேதுரு அனனியாவின் மனைவி சப்பீராளைப் பார்த்து: "கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ, உன்

புருஷனை அடக்கம்பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது, உன்னையும் வெளியே கொண்டுபோவார்கள் என்றான்" (அப்.5:9). இந்த மூவருமே தேவனுடைய கட்டளையை மீறி பாவம் செய்தனர். இன்றையநாளிலே வாழ்கின்ற அநேகர் இந்தவிதமாக தேவனுடைய கட்டளைகளை ஒவ்வொருநாளும் மீறி வாழ்ந்துகொண்டிருக் கிறார்கள். அவர்களைப் பார்த்து வேதம் எச்சரிக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம். இதை அறிந்து பாவத்திற்கு விலகவேண்டும். "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்" (எபி.10:26,27).

**பாவத்தை ஜெயித்தவர்களைக்குறித்து வேதாகமம் போதிக்கிறது:** "அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தவர்கள்? என்று கேட்டான். அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (வெளி.7:13,14). இவர்கள் கர்த்தருக்காகவும், அவருடைய வல்லமையுள்ள வசனங்களுக்கு சாட்சிகளாகவும் விளங்கியவர்கள். ஏழாவது சபையாகிய லவோதிக்கேயா சபைக்கு சொல்லும்போது; "நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்கு கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன் என்கிறார் (வெளி.3:18). இங்கே பாவக்கறைகள் உள்ள வஸ்திரத்தை வெறுத்து தள்ளி வெண்வஸ்திரத்தை என்னிடத்தில் வாங்கிக்கொள் என்கிறார். இச்செய்தியை வாசிக்கிற அன்பான சகோதரனே, சகோதரியே நீ எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறாய்? அவருடைய வல்லமையுள்ள வசனத்தினாலே பாவத்தை ஜெயித்துக்கொண்டு வருகின்றாயா? தேவனுக்கு பயந்து பாவத்தை விட்டு விலகினவர்களை எடுத்துக்காட்டாக பார்ப்போமேயானால், யோசேப்பு கனி தரும் செடி என்று தன்தகப்பன் யாக்கோபினால் ஆசீர்வதிக்கப்பட்டான். ஒரு முறை இவனுக்கு வந்த பாவத்தை எதிர்த்து "நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி என்றான்" (ஆதி.39:9). தேவனுக்குப் பயப்பட்டபடியால் இப்படிச் சொன்னான். இன்றைக்கு தேவனுக்குப் பயப்படுகிறோம் என்று சொல்லுகிறவர்கள் தங்களுக்கு எதிராக வரக்கூடிய பாவத்தை இந்தவிதமாக எதிர்த்து போராடவேண்டாமா? அதைப்போல, யோபுவைக்குறித்து படிக்கிறோம். "என் கண்களோடே உடன்படிக்கைபண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்பதெப்படி? அப்பொழுது உன்னதங்களிலிருந்து தேவன் அளிக்கும் பங்கும், உன்னதத்திலிருந்து சர்வவல்லவர் கொடுக்கும் சுதந்தரமும் கிடைக்குமோ? என்கிறார் (யோபு31:1,2). தேவனுடைய உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கைக்கொள்ளுகிற நீங்களும் நானும் கண்களோடே உடன்படிக்கை பண்ணியிருக்கிறோமா? யோபு தன் கண்களோடே உடன்படிக்கை பண்ணி, பிறனுக்கு உண்டான யாதொன்றையும் இச்சியாது வாழ்ந்தவர். அப்படியிருந்தபடியால் உன்னதத்தின் பங்கு அவருக்கு இரட்டிப்பாக கிடைத்தது. மேலும் புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பவுலைக்குறித்துப்படிக்கிறோம். "அவருக்காக எல்லாவற்றையும்

நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்" என்றார் (பிலி.3:11). கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு அவருக்கு பிரியமானதைச் செய்யவும், தேவனுடைய திருச்சித்தம் செய்யவும் தன்னை முழுவதுமாக கர்த்தருடைய பணிக்காக அர்ப்பணித்தவர் அப்போஸ்தலனாகிய பவுல். அவர் தனக்காக வாழாமல் கர்த்தருக்காகவும் அவருடைய ராஜ்யம் பரம்பி மகிமைப்படவும் வாழ்ந்தவர். ஆசிய முழுமைக்கும் சுவிசேஷம் அறிவித்தவர். புதிய ஏற்பாட்டில் அதிக நிருபங்களை எழுதியவர். பாவத்திற்கு தம்மை முழுவதும் விலக்கி பரிசுத்தத்தை வாஞ்சித்தவர். ஆகையால் எல்லாவற்றையும் நஷ்டமென்றும் குப்பையுமாக எண்ணுகிறேன் என்கிறார். இன்றைக்கு அநேகர் குப்பையைக் கிளறிக் கொண்டிருக்கின்றனர். அதிலிருந்து குப்பைதான் வரும். மேலான ஆசீர்வாதத்தை நோக்கி நிற்கிற நாம் இவர்களைப்போல பாவத்திற்கு எதிர்த்து நின்றுபோராடுவோம்.

**தேவனுடைய மனுஷனைக்குறித்து வேதாகமம் கொடுக்கும் சாட்சி:** "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்" (1யோவா.3:9). தேவனுடைய வசனமாகிய வித்து அவனுக்குள் இருக்கிறபடியால் அவன் பாவஞ்செய்யமாட்டான். அதினாலே நாம் தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசினுடைய பிள்ளைகள் இன்னாரென்றும் அறிந்துகொள்கிறோம். சிலர் கிறிஸ்தவர்கள் பாவம் செய்கிறார்களே அது எப்படி என்று நீங்கள் நினைக்கக்கூடும். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற எல்லோரும் கிறிஸ்தவர்கள் அல்ல என்பதை நீங்கள் முதலாவது புரிந்துகொள்ளவேண்டும். கிறிஸ்துவை உடையவனே கிறிஸ்தவன். கிறிஸ்துவினுடைய உபதேசத்தை பேசாதவன், அவருடைய உபதேசத்தில் நிலைத்திராதவன், அவருடைய சபையை ஏற்றுக்கொள்ளாதவன் ஒரு கிறிஸ்தவனாக இருப்பதற்கு சாத்தியமில்லை. இதை என்னுடைய யோசனையின்படி சொல்லவில்லை. வேதம் போதிக்கிறது ஒரு வருடமாக கர்த்தர் ஏற்படுத்தின சபையோடே கூடியிருந்த சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டதாக அப்போஸ்தல நடபடிகள்11:26–ல் வாசிக்கிறோம். இவைகளின்படி சரியாய் இருக்கிறவர்களும் பாவம் செய்யக்கூடும். அப்படிப்பட்டவர்களுக்கு வசனம் சொல்லுகிறது, "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1யோவா.1:9). எப்படியென்றால், மனந்திரும்பின மாயவித்தைக்காரன் பாவம் செய்யும்போது பேதுரு அவனை நோக்கி: "நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்" என்றான் (அப்.9:22). மனந்திரும்புகிற எந்த ஒரு பாவிக்கும் தேவனிடத்தில் மன்னிப்பு உண்டு என்பதை அறிந்துகொள்ளவேண்டும். "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது" என்கிறார் (வெளி.2:7). எதை ஆதாம் இழந்தானோ அதை மீண்டும் பெற்றுத் தருவதாக ஆண்டவர் இயேசு சொல்லுகிறார். நீங்கள் பாவத்துக்கு விலகி ஜெயங்கொண்டு பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் பெற்று நித்தியத்தில் நித்தியமாக வாழ உங்களை ஒப்புக்கொடுங்கள்.

# நாம் கிறிஸ்தவர்களாய் மாறாதிருந்தோமானால் எங்கேயிருப்போம்?

# *Where would be if we had not become christians?*

*- J.C.Choate*



நாம் கிறிஸ்தவர்களாகவும் கர்த்தருடைய சபை அங்கத்தினர்களாகவும் மாறாதிருந்தோமானால் நாம் எங்கேயிருப்போம் என நீங்கள் எப்போதாவது அறிய ஆவலுடனிருந்திருக்கிறீர்களா? நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படியாதிருந்தோமானால், அவர் நம்முடைய ஜீவியத்தை மாற்ற அனுமதிக்காதிருந்தோமானால், இன்று நாம் யாராக இருப்போம்? நாம் எங்கேயிருப்போம்? நாம் என்ன செய்து கொண்டிருப்போம்? நாம் ஜீவிக்கிறவர்களாய் இருப்போமா?

அப்போஸ்தலர்களையும் வேதவாக்கியங்களில் நன்கு அறியப்பட்டுள்ள மற்ற புருஷரையும் ஸ்திரீகளையும் பாருங்கள்: தேவனுடைய பெரிய ஊழியர்களாய் மாறினவர்களையும், காலகாலமாக கீர்த்திபெற்றவர்களையும் பாருங்கள், ஏனென்றால் அவர்களுடைய சரித்திரங்கள் தேவனுடைய புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளன. அவர்கள் தங்களுடைய ஜீவியங்களை கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடாதிருந்திருப்பார்களேயானால் அவர்களுக்கு என்ன நிகழ்ந்திருக்கும்?

உதாரணமாக, மனிதவர்க்கத்தின் மிகப்பெரிய வரலாற்றில், கர்த்தரில்லாமல் ஏழ்மையான மீனவன் பேதுரு என்னத்தைப் பெற்றிருப்பான்?

சவுல் மனந்திரும்பாமலிருந்திருப்பானேயானால், அவன் முடிவு என்னவாயிருந்திருக்கும்?

முதலாவது கர்த்தருக்கு கீழ்ப்படிந்ததால் மட்டும் பெரிய மாற்றத்தைக்கொண்டு வரவில்லை, மாறாக விசுவாசம் மிகமுக்கியமானதாயிருந்தது. சிலர் தங்கள் ஜீவியத்தில் விழுந்துபோனார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். யூதாஸ் ஒரு பிரதான எடுத்துக்காட்டு. மற்ற அப்போஸ்தலர்களுடன் அவனுடைய முடிவை ஒப்பிட்டுப் பார்க்கையில் அவனுடைய விசுவாசம் எப்பேர்பட்ட வித்தியாசத்தை உருவாக்கினது! அப்புறம் அனனியா, சப்பீராளுடைய சம்பவமும் உண்டு, அவர்களுடைய பொய்யினிமித்தம் பரிசுத்த ஆவியினால் எப்படி அடிக்கப்பட்டு அவர்கள் மரணமடைந்தனர்! பழையஏற்பாட்டில் நாதாபு மற்றும் அபியு பற்றிய காரியம் என்னவாயிற்று? மேலும், மாபெரும் பார்வோன் கூட தேவனுக்கு எதிர்த்து நின்றதால் தோற்றுப்போனான், மற்றும் ஏரோது ஜனங்களுக்குப் பிரசங்கித்தபோது, ஜனங்கள் இது மனுஷசத்தமல்ல, இது தேவ சத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் கர்த்தருடைய தூதனால் அடிக்கப்பட்டு இறந்தான்.

நாம் கர்த்தருடைய சித்தத்திற்கு ஏற்ப இசைந்து போகாதிருந்தோமானால், நாம் இழந்து போனவர்களாக மட்டுமல்ல, மாறாக நாம் சில சாதாரணவேலையின் அடியில் தங்கிவிடுவதிலே அதாவது , திருமணம் செய்திருக்கவும், விவாகரத்து பண்ணவும், மீண்டும் மறுமணம் செய்யவும், குடிகாரனாக மாறுகின்றவனாகவும், ஒரு போதைக்கு அடிமையானவனாகவும், சாபத்தின் பழக்கத்தில் வளர்ந்தவனாகவும், எல்லாவிதமான பிரச்சனைகளில் அகப்பட்டவனாகவும் மாறி அதிலே திருப்தியடைந்தவர்களாயிருக்கலாம்.

நாம் இப்பேர்பட்ட வழிகளில் சென்றிராதவர்களாயிருந்தாலும் கூட, நாம் இறுதியில் ஒன்றையும் பெற்றிராதவர்களாகவே நிலைத்திருப்போம், நம்முடைய வாழ்வு சாதகமான எந்த மாற்றத்தையும் இவ்வுலகில் உருவாக்கியிருக்காது. மற்றபடி நாம் வெறுமனே வாழ்ந்து, மரித்து, இறுதியாக மொத்தத்தில் நித்தியஜீவனை இழந்தவர்களாகவே இருந்திருப்போம். இது பயங்காரமானதல்லவா?

ஆனால் நாம் ஒரு கிறிஸ்தவனாக மாறி இருந்தாலும்கூட, விசுவாசமில்லாதவர்களாய் இருந்தோமானால், நம்முடைய ஆத்துமாவை இழந்தவர்களாக; உலகத்தினுள் மீண்டும் சென்று, பாவம் நிறைந்த, ஏமாற்று வாழ்க்கை வாழ்கின்றவர்களாக, ஒருவேளை சில தவறான சமயக் குழுவில் இணைந்தவர்களாக, கர்த்தருடைய வழிக்கு விரோதமாக வாழ்கின்றவர்களாக போய்விடுவோம். இப்படிப்பட்ட காரிங்களை நினைப்பதற்குக் கூட பயமாகயிருக்கின்றது.

தேவனுடைய பிள்ளையாக நாம் மாறும்போது எப்பேர்பட்ட வேறுபாடு! பல கிறிஸ்தவர்கள் தொடர்ந்து வெற்றியுள்ளவர்களாகவும் பிரசித்திபெற்றவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் வியாபாரத்தில் வெற்றியடைகின்றனர், தங்களுடைய சமுதாயத்தில் தலைவர்களாக மாறுகின்றனர், உயர்வான கல்வியறிவு பெற்றவர்களாகவும், கல்லூரி, பல்கலைகழகங்களின் தலைவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் கிறிஸ்தவர்களாக, இருக்கின்றதாலும், கிறிஸ்தவ கோட்பாடுகளின்படி வாழ்கின்றதாலும் எண்ணிலடங்காத மற்ற பகுதிகள் மாபெரும் வெற்றியினையும், வளர்ச்சியினையும் காணுகின்றது.

எப்படியோ, கிறிஸ்தவர்கள் வாழ்க்கையில் எவ்வாறு இந்த நிலைமையை அடைந்தார்கள் என அறியாது அடிக்கடி கண்சொருகிப்போன சுபாவமுடையவர்களாக இருப்பதே பிரச்சனையாக இருக்கிறது. அவர்கள் முழு ஆசீர்வாதங்களும் தங்களாலே வந்ததைப் போல நினைத்து, "பாருங்கள் நான் என்னமாய் இதைச் செய்திருக்கிறேன், இதை நிறைவேற்றி முடிக்க எத்தகைய திறன் கொண்டிருக்கிறேன்!" என சொல்லுகிறார்கள். உலகத்தில் அதிகமான ஜனங்கள் வெற்றி பெறுகின்றனர், ஆனால் ஒரு கிறிஸ்தவனாக மாறியிருக்கிறவன் தன்னுடைய வாழ்வில் கிறிஸ்தவ கோட்பாடுகளை செயல்படுத்தும்போதும் சத்தியத்தோடும், நீதியோடும் சம்பந்தப்படாதவைகளைப் பழக்குவிப்பதிலிருந்து விலகி இருக்கும் போதும் இதைப்போல் வெகு அதிகமான வெற்றிகளைப் பெற்றுக்கொள்ளுகிறான்.

ஒருவன் கிறிஸ்தவனாக மாறுகின்ற போது, அவன் தன் ஜீவியத்தை மாற்றுகிறான். உலகை வித்தியாசமான முறையில் காண்கின்றான். அவன் கிறிஸ்துவையும், பின்பற்றும்படிக்கு கிறிஸ்தவக் கோட்பாடுகளையும், அடையும்படிக்கு இலக்கையும் பெற்றிருக்கிறான். அவன் ஒரு கடின உழைப்பாளி, தன்னுடன் வேலை

செய்கிறவர்களிடத்தில் மரியாதையையும் பெற்றிருக்கிறான், மற்றவர்களோடு நடந்து கொள்ளுவதில் நேர்மையுடனிருக்கிறான், தன்னால் இயன்ற மட்டும் தன்னுடைய வேலையை சிறப்பாக செய்ய முயற்சிக்கிறான். அவன் தனக்கு உதவிசெய்து, வெற்றியடைய தன்னை ஊக்கப்படுத்தும் கிறிஸ்தவர்களோடு ஐக்கியம் கொண்டிருக்கிறான். அவனுடைய சரீர ஜீவியமும், அவனுடைய குடும்ப அங்கத்தினர்களின் ஜீவியமும் மாற்றமடைந்திருக்கிறது. அவர்கள் சாப்பிடுகிற, குடிக்கிற பொருட்களினாலும் அல்லது தங்களுடைய ஜீவியத்தினாலும் அவர்கள் தங்களுடைய சரீரங்களை தகாத விதமாக பயன்படுத்துவதில்லை, எனவே அவர்கள் வழக்கமாக நல்ல உடல்நலம் பெற்றிருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய பணத்தை நன்றாக குடிப்பதற்கும், சூதாடுவதற்கும், கெட்டபழக்க வழக்கங்களுக்கும் வீணாக்காதபடியினால் கல்விக்காகவும், வியாபாரத்திற்காகவும், மற்ற தகுதியான நல்ல காரியங்களுக்காகவும் செலவு செய்கின்றனர்.

எனவே நம்முடைய ஜீவியத்தையும் எதிர்காலத்தையும் இவ்வுலகில் மாற்றுகின்ற கிறிஸ்தவத்தை பெற்றிராதிருந்தோமானால் நாம் எங்கேயிருப்போம், மேலும் நம்முடைய நித்தியத்தை எங்கே கழிப்போம்?

ஜீவனுக்காகவும் மரணத்திற்காகவும் நீங்கள் ஏதேனும் பெற்றிருக்கிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக இருக்கும்படிக்கு நான் உங்களை ஊக்கப்படுத்துகிறேன். கிறிஸ்தவம், உங்கள் ஜீவியத்தை ஒரு நித்திய வெற்றியுள்ள ஜீவியமாக மாற்றட்டும்.

# ஒரு கோதுமை விதை
# A Grain of Wheat

ஒரு கோதுமை விதை சாகாவிட்டால்,
அது ஒரு தனி விதையாக, தனிமையில் நிலைத்திருக்கும்,
நாம் நமது சுயத்தை சாகடிக்காவிட்டால்,
நாம் நமது கர்த்தருடைய அறுவடை விதையாக இருக்கமுடியாது.

அவர் ஜீவித்தார், அவர் நேசித்தார், நமக்காக எல்லாவற்றையும் கொடுத்தார்
ஆகவே அவர் தம்மையே "தானியத்தின் விதையாக" விதைத்தார்,
அவருக்காக, நமக்கு அறுவடை வருகிறது,
மரணம் மரிப்பதற்காகவும் ஜீவன் ஜெனிப்பதற்காகவும்.

இயேசு தம்மைப் பின்பற்ற துரிதப்படுத்துகிறார்,
நிலைத்திருந்து, அதிக கனிகளைக் கொடுக்க,
நாம் கல்வாரியை அனுபவிக்கத் தேவையில்லை
நாம் விதை விதைக்க வேண்டியதே அவசியம்.

*- Calton Elkins (VOTI)*

பெண்கள் பகுதி


இயேசு கிறிஸ்து, நித்திய பலி

Jesus Christ, the Eternal Sacrifice

*-Betty Burton Choate*

# தலை மற்றும் அவருடைய சரீரம்

# The Head and His Body



"எப்படியெனில், சரீரம் ஒன்று அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்... நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" (1கொரி.12:12,27).

இந்த வசனம் ".... அந்தப்பிரகாரமாக கிறிஸ்துவின் **சரீரம்** இருக்கிறது" என்று மாத்திரம் கூறவில்லை, அது ஒன்றாகவே; **இணைந் திருக்கிறது** என்கிறது. ஆனால் இந்த வசனம், "... அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவுமிருக்கிறார்..." என்றும், தம்மை தலையாகவும் அவருடைய சரீரமாகிய சபையாகவும் அடையாளப்படுத்துகின்றார். இப்படியாக முழுவதும் கிறிஸ்து என்று அழைக்கப்படுகிற முழுவதும் ஒன்றுபட்ட ஒன்றாகயிருக்கிறது.

நம்முடைய மனங்கள் அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கின மாதிரியையும் மற்றும் மனுஷனை பாவத்தின் தண்டனையிலிருந்து விடுவிக்கும்படிக்கு தாமே சுமந்துதீர்த்த தம்முடைய இயற்கை நீதியையும் தெய்வீகத் தன்மையையும் பின்பற்றுகிறதா? தம்முடைய சொந்த நித்திய மகிமையைத் துறப்பதற்கும் மாம்சத்தில் பிறப்பதற்கும் இது அவருக்குப்போதுமானதாகயிருக்கவில்லை; நம்முடைய பாவங்களை தாமாக ஏற்றுக்கொள்ளும் பொருட்டு சிலுவையின் மூலம் மரணத்தின் அவமானத்தை சுமப்பதற்கு இது அவருக்குப் போதுமானதாகயிருக்கவில்லை. அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அநேகமாக இரண்டாயிரம் ஆண்டுகள் ஆனபடியினால், **அவர் மேலும் மனிதர்களாலான சரீரத்திற்கு மேலான தலையாக இருக்கும்படிக்கு தம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறார்.**

அடிக்கடி, மாம்ச சரீரத்தை அடிமைப்படுத்தக் கூடிய இன்னிசையைப் பார்க்கையில், நாம் சங்கிலியால் கட்டப்பட்ட பலமுள்ள சரீரத்தைக் கொண்டிருக்கும் பயத்தில் உள்ளுக்குள் நெளிகிறோம் அல்லது மனமுடைந்து அல்லது ஆரோக்கியமும், புத்தியுமுள்ள மனம் செயலிழந்துபோன சரீரத்தில் சிறைபட்டு போகிறோம். வயது முதிர்ந்த சிறையிருப்பு ஏறக்குறைய பீதியடையச் செய்கிறது. இப்படிப்பட்ட சிறையிருப்புகளுடன் வாழ்வது ஒவ்வொரு வருடமும் எப்பேர்பட்ட ஏமாற்றமும் மனமுடையதலுமாயிருக்கும்.

**சரீரத்தினால் சுமந்த பாடுகள்**

நாம் சிலநேரங்களில் அவருடைய செயலாக, சில சமயங்களில் ஆர்வமிக்கவர்களாக, சில சமயங்களில் சோம்பலாக, சில சமங்களில்

எதிர்க்கிறவர்களாக, சில சமயங்களில் செயலிழந்தவர்களாக, சில சமயங்களில் இவ்வுலகில் செத்த சரீரமாக இருக்கிறபடியால் மெய்யான வழியில், நம்முடைய உயிர்த்தெழுந்த கிறிஸ்து ஒவ்வொரு நாளும் நம்முடைய தலையாக இருப்பதில் எல்லைக்குட்பட்ட தடைகளை அனுபவிக்கிறார்.

சரீரத்தோடுள்ள உறவில் தலையின் பங்கு என்ன? இது தன்னிச்சையான, தன்னிச்சையற்ற செயல்பாடுகளின், எண்ணங்களின் பிறப்பிடத்தின் முனையாக இருக்கிறது. தலை பார்க்கிறது, ஆசைப்படுகிறது, விரும்புகிறது; ஆனால் இது ஒன்றோடொன்று இணைந்து வேலைசெய்யும் சரீரத்தின் அங்கங்களை, பார்வையை நேர்படுத்தும்படிக்கு சார்ந்திருக்கவேண்டும்.

> கிறிஸ்து அற்புதத்தினால் இருதயங்களை மாற்றும்படிக்கு பூமிக்கு இறங்கி வந்திருக்கிறாரா? தேவதூதர்கள் உலகத்தை சுற்றிவந்து சுவிசேஷத்தை பிரசங்கித்துக் கொண்டிருக்கிறார்களா?

தேவன் ஆதியிலிருந்தே மனிதனுக்கு இரட்சிப்பின் வழியைத் திறக்கும் நோக்கிற்காகவே இவையெல்லாவற்றையும் செய்திருக்கிறார். கிறிஸ்து அந்த இலக்கை அடையும்படிக்கு மரித்தார். ஆனால்

தேவன் பரலோகத்திலிருந்து ஜனங்களிடம் நேரடியாக பேசுகிறாரா? கிறிஸ்து இருதயங்களை மாற்றும்படிக்கு அற்புதங்களோடு இறங்கிவந்தாரா? தேவதூதர்கள் உலகத்தைச் சுற்றிவந்து சுவிசேஷத்தைப் போதிக்கின்றார்களா? இல்லை.

பிறகு இவைகளெல்லாம் யாருடைய கரங்களில் உள்ளன? அவருடைய சரீரத்தின் கரங்களில். தலை உலகத்தைப் பார்க்கிறது; அவர் இழந்துபோனவர்களுக்காக ஏங்குகிறார்; எல்லாரும் சுவிசேஷத்தின் அன்பையும், இரக்கத்தையும் உணரவேண்டுமென அவர் விரும்புகிறார். மூளையிலிருந்து கண்களுக்கும், நாவிற்கும், கைகளுக்கும், கால்களுக்கு இருதயத்திற்கும் செய்திகள் அனுப்பப்பட்டு வருகிறது. அங்கே ஒருமித்த பிரதியுத்திரங்கள் காணப்படும்போது, அநாதி தீர்மானங்கள் நிறைவேறுகிறது என்று அவர் அறியவேண்டும் என்பது எப்பேர்ப்பட்ட மகிழ்ச்சி!

ஆனால், தலையிலிருந்து செய்தி அனுப்பபட்டு, போதனைகளுக்கு செவிசாய்க்க தம்முடைய சரீரத்தின் அங்கங்கள் மறுக்கும்போது அவர் ஏமாற்றத்தையும் மன வேதனையையும் அனுபவிக்கவேண்டும் என்பதை நினைத்துப்பாருங்கள். எத்தனை முறை அவர் நம்முடைய சோம்பல் அல்லது செயலற்ற நிலையினால் சிறைப்படுத்தப்படுகிறார் என்பதை சிந்தியுங்கள். அவருடைய சரீரத்தில் அங்கங்கள் அவரைக் காட்டிக்கொடுத்து துரோகம் பண்ணும்போது எவ்வளவு மனவேதனை அடையவேண்டியுள்ளது என்பதையும், நம்முடைய வெட்கக்கேடான செயல்களால் எவ்வளவு அதிகமாக அவருடைய மகிமை அவதூறு செய்யப்படுகிறது என்பதையும் சிந்தியுங்கள். தேவனுடைய சாராம்சம், பொய், வஞ்சனை, ஒழுக்கம்கெட்ட வாழ்வு, தீமையான நினைவுகளில் சந்தோஷப்படுதல், கெட்டவார்த்தைகளை பயன்படுத்துதல், வீட்டைக் களைத்தல், திக்கற்றவர்களுக்கு உதவி செய்வதைத் தவிர்த்தல் போன்றவற்றில் அவர் விருப்பம் கொள்வாரா? அவருடைய சரீரமாக நாம் எதைச்செய்தாலும், அவருக்கென்றே நேரடியாகச் செய்வோமாக.

வாரந்தோறும், அவருடைய சரீரத்தில் பங்குகொள்ளுவதினால் அவருக்குள் நாம் ஜீவிக்கிறவர்களாவோம். அனுதினமும் நாம் அவருடைய சரீரமாக இருக்கிறபடியால் நாம் அவரில் ஜீவிப்போமாக!

# விசேஷித்த மேன்மை
# Special Distinction

*-J.Glory Arjunan*



கடந்த ஜூலை மாத இதழில் வேதாகமத்தில் விசேஷித்த மேன்மையான இடத்திலிருந்த சில ஸ்திரீகளாகிய சிலுவையின் கடைசி (Last At the Cross) வரை இயேசுவோடு இருந்த மகதலேனா மரியாள், யோசேயின் (இயேசுவின் தாயும்கூட) தாயாகிய மரியாள், முதலாவது கல்லறையினிடத்திலிருந்து (First At the Tomb) இயேசுவை தரிசித்த மகதலேனா மரியாள் மற்றும் முதலாவது இயேசுவின் உயிர்த்தெழு தலை அறிவித்த (First to proclaim Resurrection) மகதலேனா மரியாள் மற்ற மரியாள் ஆகியோரின் மேன்மையான காரியங்களைக் குறித்து வேதாகம ஆதாரத்துடன் அறிந்து கொண்டோம். அதைப்போலவே இன்றும்கூட வேதாகமத்தில் விசேஷித்த மேன்மையான இடத்தைப்பிடித்த வேறு சில சகோதரிகளைக்குறித்து ஆராய்ந்து பார்ப்போம்.

**முதலாவது யூதர்களுக்கு அறிவித்தவள் (First Preach to the Jews):**

யார் அவள்? எதைப் பற்றி அறிவித்தாள்? லூக்கா2:36,37–ல் அவளைக் காணலாம், "ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானதுமுதல் ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயதுசென்றவளுமாயிருந்தாள். ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமலும், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம் பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள். அவளும்அந்நேரத்திலே வந்து நின்று, கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்துப் (இயேசுவை) பேசினாள்". இந்த தீர்க்கதரிசி எருசலேமிலே தங்களுக்கு மீட்புண்டாக வேண்டும், இரட்சிப்புண்டாக வேண்டுமென காத்திருந்த யூதர்களுக்கு இயேசுவைக் குறித்து அறிவித்தாள். பாவத்திலிருந்து யாவரையும் மீட்கப்போகிற இயேசு இவர்தான் என்று யூதர்களுக்கு அறிவித்தாள். அன்பு சகோதரியே, அவளுடைய சூழ்நிலைகளை அறிந்தீர்களா? ஒன்று, அவள் தன் புருஷனோடு ஏழுவருஷம் மட்டுமே வாழ்ந்தவள், அடுத்தாக, அவள் ஏறக்குறைய எண்பத்துநாலு வயதை அடைந்த விதவை. கன்னிப்பருவத்தில் விவாகம் செய்து ஏழு ஆண்டுகள் மட்டுமே புருஷனோடு வாழ்ந்து அதன்பின் ஏறக்குறைய எண்பத்துநாலு வயது வரை விதவைக் கோலம் பூண்டவளாயிருந்த அவளது மனநிலை எப்படியிருந்திருக்கும் என்று சற்றே சிந்திபோம்!

அவள் நிச்சயமாகவே தன்னுடைய விதவையிருப்பை குறித்தும் அதிகக் கவலைகொள்ளா தவளாக இருந்திருக்கலாம். அதனால் தான் அவள் தேவாலயத்தை அண்டி, அதை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி ஆராதனை செய்து கொண்டிருந்தாள் என வாசிக்கிறோம். இந்த அன்னாளை நினைக்கும் போது எனக்கு மெய்யாகவே மெய்சிலிர்க்கிறது. பொதுவாக, சமுதாயத்தில் பிள்ளைகளெல்லாரும் தாயையும் தகப்பனையும் விட்டுச் சென்று விடுவார்கள், ஆனால் கணவனும் மனைவியும் மட்டும் கடைசிவரை ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பார்கள் என்பர். ஆனால் இந்த அன்னாள் அந்த உறவை இழந்த போதிலும் தேவனைப்பற்றிக் கொண்டது எவ்வளவு விசேஷித்த மேன்மையாயிருக்கிறது! சங்கீதக்காரனாகிய தாவீது இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்கிறார். ஆம், இதன்படி இவள் ஒரு பாக்கியவதி, தேவலாயத்தை விட்டு நீங்காமல் உபவாசித்து ஜெபம் பண்ணி அதாவது மரியாள் இயேசுவின் பாதத்தைவிட்டு நீங்காமல் நல்ல பங்கை தெரிந்துகொண்டதுபோல, இவளும் தேவாலயத்தை விட்டு நீங்காது இருந்திருக்கிறாள்.

அன்பு சகோதரியே, நம்மை சுற்றிலும் உள்ள அநேகர் இந்த மீட்பரைப் பற்றி அறியாமலிருக்கிறார்கள். இந்த மீட்பராகிய இயேசுவைக் குறித்து அறிவித்தும் ஏற்றுக்கொள்ளாமல் ஏளனம் செய்கிறவர்களும் அநேகர். இப்படியிருக்க, நீங்கள் உங்களைக் குறித்தும், உங்களுடைய இழப்பு, வேதனை கஷ்டம், நஷ்டம், உங்களுடைய உறவுகள் இதுபோன்ற இன்னும் எத்தனையோ காரியங்களைக் குறித்தும் சிந்தித்துக்கொண்டு இருக்கிறீர்களா? மார்த்தாளைப்போல அநேகக் காரியங்களைக் குறித்து கவலை கொண்டிருப்போமானால் நாம் ஒன்றையும் சாதிக்கப்போவதில்லை. மரித்தோர் மரித்தோரை அடக்கம்செய்யட்டும், நீயோ என்னைப் பின்பற்றி வா என இயேசு கூறிய வார்த்தை உங்கள் செவியில் விழவில்லையா? இயேசுவை அறிந்தும், அறியாதவர்களைப்போல, ஆவியில் மரித்தவர்களாக ஏனோ, தானோவென்று ஜீவிப்பதை தேவன் ஒருபோதும் விரும்புகிறதில்லை. நம்மை நாமே தேவ சமூகத்தில் குணப்படுத்திக்கொண்டு மற்றவர்களை ஸ்திரப்படுத்த இந்த மீட்பின் செய்தியை அறிவிப்போம். மேன்மையான இந்தப் பணிக்கு ஈடான ஒரு பணியும் இவ்வுலகில் இல்லை. இழந்த காரியங்களையே நினைத்துக் கொண்டிராமல் வரப்போகும் பரலோக மேன்மையை நினைத்து ஒவ்வொருநாளும் இழந்துகொண்டிருக்கிற ஸ்திரீகளைக் காப்பாற்றுவோம். அன்னாளைப் போல இரவும் பகலும் தேவசமூகத்தை விட்டு நீங்காமல் தனிப்பட்ட முறையில் உபவாசித்து, ஜெபித்து மீட்பின் செய்தியை அறிவிக்க ஆயத்தப்படுவோம்.

**முதல் ஜெபக்கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் (Attended the First Prayear Meeting) :**

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்கு தரிசனமாகி, அவர்களை நோக்கி பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறும்படி எருசலேமை விட்டுப் போகாமல் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார் (அப்.1:3–5). அதன்படி "அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்" (அப்.1:14). இந்த

ஜெபக்கூட்டம் இயேசு பரமேறிச்சென்றபின் கூடின முதல் ஜெபக்கூட்டம். அந்த முதல் ஜெபக்கூட்டத்தில் ஸ்திரீகளும் இயேசுவின் தாயாகிய மரியாளும் இருந்திருக்கிறார்கள். அப்போஸ்தலர்களெல்லாரும் இவர்களோடு ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். அந்த ஸ்திரீகள் செய்த காரியங்கள் இரண்டு. ஒன்று, ஒருமனப்பட்டவர்களாயிருந்தார்கள். இயேசுவின் நாமத்தில் கூடுகிற அன்பு சகோதரியே, உங்களிடத்தில் இவ்விதமான ஒருமனமிருக்கிறதா? சபையில் ஒருவர் ஜெபிக்கிம்போது கூடியிருக்கிற சிலர் தங்கள் தங்கள் மனதில் என்ன நினைத்திருக்கிறார்களோ அதைச் சொல்லிக்கொண்டிருப்பார்கள் இல்லாவிட்டால் எதற்காக அந்த நபர் விண்ணப்பிக்கிறாரோ அந்த விண்ணப்பத்தில் முழுகவனம் செலுத்திக் கொண்டிருப்பவருக்கு இடையூராக ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்று ஓயாமல் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். இப்படி ஜெபிப்பது ஒருமனப்பட்டு ஜெபிக்கின்ற ஜெபமாகவும் விண்ணப்பமாகவும் இருக்கமுடியாது. ஒருமனம் என்றால் ஒரே காரியத்தை கூடியிருக்கிற அனைவரும் மனதில் கொண்டு ஜெபிப்பதாகும். இடைவிடாமல் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள் என வேதம் கூறாமல் "எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்" என்று கூறுகிறது ஆங்கில வேதாகமத்தில் "Give thanks in all circumstances" என்றுள்ளது. அப்படியானால் யோபு கூறினதுபோல் 'கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்' என எச்சூழலிலும் ஸ்தோத்திரம் சொல்ல வேண்டும்.

இரண்டாவதாக, அந்த ஸ்திரீகள் ஜெபத்திலும, விண்ணப்பத்திலும் தரித்திருந்தார்கள். சில ஆங்கில வேதாகமங்களில் Continued மற்றும் Constantly என்று எழுதப்பட்டுள்ளது. ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் தொடர்ச்சியாக மற்றும் இடைவிடாமல் இருந்திருக்கிறார்கள். நாம் இங்கே சற்று சிந்திப்போம். நாம் கூடி ஜெபிக்கையில் இவ்வாறு இருக்கிறோமா? அல்லது ஜெபம் முடிவதற்குள் நம்சொந்த வேலைகளினிமித்தம் இடையிலேயே எழுந்து சென்று விடுகிறோமா? ஆதி அப்போஸ்தல்களோடேகூட, ஸ்திரீகளும் உறுதியுடனிருந்தனர். புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் என்ற வசனத்தின்படி சபை சகோதரர்களோடு ஒருமனப்பட்டவர்களாக ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் தரித்திருந்த சமயத்தில் கிறிஸ்துவின் சபை எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. இன்றும் நம் தமிழகம் முழுவதும், ஏன் நம் பாரதம் முழுவதும் ஆங்காங்கே கிறிஸ்து தமது சபையை ஸ்தாபிக்க வல்லவராயிருக்கிறாரே. நம்மைப் பாவத்திலிருந்து மீட்க இரத்தம் சிந்தி மரித்த இயேசுவுக்காக நீ என்ன செய்யப்போகிறாய் என்பதை சிந்தித்துப்பார். முதலாவது மீட்பின் செய்தியை யூதர்களுக்கு அறிவித்த அன்னாளைப் போலவும் முதல் ஜெபக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஸ்திரீகளைப்போலவும் இயேசுவுக்காக இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்திற்காக எதையும் செய்ய முதலாவதாக இருப்போம். அடுத்த இதழில் விசேஷித்த மேன்மையான இடத்தைப் பிடித்த முதலாவது ஸ்திரீயைக் குறித்து ஆராயும் வரை கர்த்தர் தாமே அவருக்குப் பிரியமானதைச் செய்ய நமக்கு உதவிசெய்வாராக!

— *தொடரும்*

கிறிஸ்துவ தலைமைத்துவ பயிற்சி பாடங்கள்
Christian Leadership Training Course

பாடம் - 20

# பிரசங்கிக்கும் வழி முறைகள்
## Methods of Preaching

**J.C.Choate**

*-Translated by G.Daniyal, Chennai*

பிரசங்கியாருடைய வேலை தேவனுடைய வார்த்தையின்படி பிரசங்கிப்பதும், அறிவிப்பதும், சுவிஷேசத்தை இழந்துபோன, மரித்துக்கொண்டு இருக்கிற உலகத்திற்கு எடுத்துச்சொல்லுவதுமே என்பது நமக்கு தெரியும் (மத்தேயு 16:15–16). முன்பு அப்போஸ்தலருடைய காலங்களிலே சுவிஷேசத்தை தங்கள் வாய்வழியாக கூடியிருந்த மக்களுக்கு அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் காண்கிறபடி பிரசங்கித்தார்கள், இன்னொருவகை தனிப்பட்ட முறையிலே போதிப்பது. அப்.8ம் அதிகாரத்தில் பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து கர்த்தருக்குள் கீழ்ப்படிவதன் அவசியத்தை போதித்தது.

அந்தக் காலங்களிலே வேத வசனங்களை பிரதிகள் எடுத்து மற்றவர்கள் வாசிப்பதற்கு ஏதுவாக மக்களுக்கு கொடுப்பது வேதபாரகரின் வேலையாயிருந்தது. பவுலும் மற்றவர்களும் தங்கள் சகோதரர்களுக்கு கடிதங்கள் வாயிலாக ஆலோசனை சொல்லி கர்த்தருக்கு விசுவாசமாயிருக்கும்படியும் கள்ள போதகரிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ளும்படியும் தைரியப்படுத்தினார்கள் (2கொரிந்தியர் 7:8).

ஆனால் அந்த நாட்களிலிருந்து காரியங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக பல வகைகளில் மாறிவிட்டன. அநேக சாதனங்கள் வேலையில் பயன்படுத்துவதற்கு இப்போது உள்ளன. ஒரு செய்தியை இன்னொருவருக்கோ, அல்லது அநேகருக்கோ அல்லது உலகம் முழுவதற்கும் அனுப்பவோ இன்றைக்கு அநேக வகைகளும், வழிகளும் உள்ளன. மருத்துவத்துறையில் இன்றைக்கு உள்ள முன்னேற்றங்களை நாம் சிந்திக்கிறோம். இன்றைக்கு பல வகையான மருந்துகளும், பயிற்சி செய்வதற்கு பலவகையான கருவிகளும் ஒரு மருத்துவர் எல்லாவற்றையும் கைக்கொள்ள முடியாத அளவிற்கு குணமாக்கும் வழிகள் அநேகம் உள்ளதால், அவர் மருந்துகளை கொடுப்பதற்கும் பயிற்சிக்கும் குறிப்பிட்ட ஒரு துறையை தேர்ந்தெடுத்து பயிற்சி பெறுகிறார். பிரசங்கியாரைப் பற்றியும் கூட இந்த வகைப்பொருத்தமானதே. தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கவும், போதிக்கவும், அநேக வழிகளும் வகைகளும் உள்ளன. ஒருவரே இவை எல்லா வழிவகைகளையும் சிறப்பாகச் செய்ய முடியாது. ஆகவே ஒருவர் தன்னுடைய திறமையை எந்தெந்த வழிகளில் வளர்த்துக்கொள்ள முடியுமோ அவைகளை தேர்ந்தெடுத்து பயிற்சி செய்வது அவசியம். தேவனுடைய வார்த்தையோடு முரண்படாத வகையில் எல்லா வழிவகைகளும் நல்லதாகவும் வல்லமையுள்ளதாகவும் இருக்க முடியும் அவைகள் சிலவற்றைப் பார்ப்போம்.

உண்மையாகவே தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதில் இன்றும் பாரம்பரிய வழிமுறைகள் வல்லமையுள்ளதாயிருக்கிறது. பிரசங்கமேடையிலிருந்து பிரசங்கிப்பதும், தனிப்பட்ட முறையில் சென்று ஊழியம் செய்வதையும் இங்கு நான் குறிப்பிடுகிறேன். ஒரு கூட்டத்தில் முகமுகமாக பார்த்து அல்லது ஒவ்வொருவரிடமும் தனியாக சந்தித்து பிரசங்கிப்பதைப்போல வல்லமையான வழி ஒன்றுமில்லை. இந்த

வழிகள் வல்லமையாயிருப்பதற்குக் காரணம் இரட்சிப்புக்கு ஏதுவான தேவ பலமாயிருக்கின்ற சுவிசேஷத்தை அறிவிப்பதுதான் (ரோமர் 1:16).

பிரசங்கிக்கிற வகையில் சுவிசேஷக் கூட்டங்கள் ஒன்று சிலர் அதை மாபெரும் சுவிஷேசக் கூட்டங்கள் என்று அழைக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட வீட்டிலோ, விசாலமான அறையிலோ அல்லது அதுபோன்ற இடங்களிலோ ஒரு பிரசங்கியாரை அழைத்து பல இரவுகள் தொடர்ச்சியாக குறிப்பிட்ட நாட்களுக்கு பிரசங்கம் செய்யச் சொல்வார்கள் இந்த சமயத்திலே அதிகமான ஜனக்கூட்டம் கவரப்பட்டு அதிலே பலர் கர்த்தருக்குள் கீழ்ப்படியக் கூடும், கர்த்தருடைய சபையை தொடங்கும் பட்சத்தில் இந்த விதமான கூட்டங்கள் புது இடங்களில் நடத்தப்படும். இந்தத் தருணத்திலே உங்களை நான் மிகவும் கேட்டுக்கொள்வது என்னவென்றால் அமெரிக்க சகோதரரைப்போல இந்த விதமான கூட்டங்களை இரண்டு மூன்று இரவோடு நிறுத்தாமல் ஒருவாரம், பத்து நாட்கள் அல்லது இரண்டு வாரம் தொடர்ச்சியாக நடத்துங்கள். போதுமான நேரம் சந்திப்பதிலும் மக்களுக்கு ஆர்வத்தை உருவாக்குவதிலும் செலவிடுங்கள்.

ஒன்றை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். அமெரிக்க சகோதரர்கள் இந்த விதமான கூட்டங்களுக்கு அந்த நாட்களில் முயற்சி எடுத்துக்கொண்டனர் அதன் பயனாக சபை வேகமாக வளர்ந்தது. ஒரு குறிப்பிட்ட பகுதியிலுள்ள மக்களுக்கும் உலகம் முழுமைக்கும் சுவிஷேசத்தைக் கொண்டு செல்ல புத்தகங்கள் ஒரு சிறந்த வழி கைப்பிரதிகள், அஞ்சல்வழி வேதாகம வகுப்புகள், பத்திரிக்கைகள், விளம்பரங்கள், புத்தகங்கள் மற்றும் செய்தித்தாள்கள் மூலமாக போதிப்பது எண்ணற்ற மக்களுக்கு கர்த்தரை அறிமுகப்படுத்தியதோடு சபையை பெலப்படுத்துவதிலும், அங்கத்தினர் களுக்கும் மற்றவர்களுக்கும் போதிக்கதக்க எழுத்துப்பிரதிகளும் வழங்கியிருக்கிறது. கிறிஸ்தவ இலக்கியம் இன்றைக்கும் ஒரு சக்தி வாய்ந்த ஊடகம்.

ஆனால் பெரும் திரளான மக்களை சென்றடைவதிலும் தங்கள் கதவுகளை சுவிசேஷசத்திற்கு அடைத்துக்கொள்கிற மக்களைச் சென்றடைவதிலும் வானொலி பிரசங்கத்தை மிஞ்சமுடியாது. மேலும் இந்த வழியாக அஞ்சல் வழி வேதாகம பயிற்சி, மற்றும் பல வகையான எழுத்துப் பிரதிகளும் கொடுக்கப்படமுடியும்.

வானொலியோடு கூட இப்பொழுது இன்னும் சக்தி வாய்ந்த தொலைக் காட்சியும் உள்ளது. முன்னமே தொலைக்காட்சி சில நாடுகளில் வல்லமையாகப் பயன்படுத்தப்படுகின்றன, வரப்போகிற வருஷங்களில் தொலைக்காட்சி மூலமாக உலகம் முழுவதும் ஒரு பிரசங்கியார் பிரசங்கிக்க முடியும்.

இந்த சந்தர்ப்பத்தில் தேச முழுவதும் பயன்படுகின்ற வானொலி, தொலைக் காட்சியோடு ஒலி, ஒளி நாடாக்கள் வீடியோக்கள் (கேபிள்) கம்பி வழி ஒளி பரப்பு மற்றும் செயற்க்கைகோள் இவைகளையும் பிரசங்கம் செய்ய நன்கு பயன்படுத்தலாம்.

பாடங்களை போதிப்பதில் பார்த்து படிக்கக்கூடிய சாதனங்களை பயன்படுத்தலாம், படச்சுருள்கள், அவைகளை காட்ட பயன்படும் கருவிகள் மேலும் அட்டவணைகள், கரும்பலகைகள் போன்றவற்றை பயன்படுத்தலாம். இந்த விதமான பார்த்து படிக்கின்ற வழிகள் மூலமாக மக்கள் சுவிஷேசத்தைக் கேட்பதோடு தங்கள் வாழ்க்கையில் அந்த செய்திகள் நேரடியாக கொண்டுவரப்படுவதை காண முடியும்.

வேதாகம பள்ளிகள், வேதாகம முகாம்கள் பல சிறப்புக் கூட்டங்கள், கருத்தரங்குகள் வேத விரிவுரைகள் நிகழ்த்துவது போன்ற கூட்டங்களுக்கு சபையார்

தங்கள் நண்பர்கள் வாலிபர்களையும் மேலும் பலதரப்பட்ட வயதினரையும் ஐக்கியத்திற்காகவும், வேதத்தை ஆய்ந்து படிப்பதற்காகவும் அழைத்து வரலாம்.

இவைகளில் சில வழிகள் ஒன்றைவிட மற்றொன்று போதிப்பதற்கு சிறந்ததாகக் காணப்படும். ஆனால் காலங்கள் மாறுகிறது ஆகவே வழி வகைகளுடைய சக்தியும் மாறுகிறது. ஜனங்களுக்கு எந்த விதமான வழிகள் பிடிக்கிறது என்பதை நாம் கண்டறிந்து எப்படி அவர்களைச் சிறந்த முறையில் சென்றடையும் என்பதைக் கண்டு, அந்த வழிகளை பயன்படுத்தி அவர்களை கிறிஸ்துவுக்குள் ஆதாயப்படுத்த வேண்டும். சபையானது அதனுடைய வேலைகளைச் செய்யும் முறைகளில் மென்மையாக இருக்க வேண்டும். சுவிசேஷசமானது அதனுடைய தூய்மையோடு பிரசங்கிக்கப்படுவதே காரியம். அதுவே கேட்கிறவர்களை மனமாற்றமடையச் செய்யும். மாம்சத்திற்குப் பிரியமான கவர்ச்சிகரமான காட்சிகள், பொழுதுபோக்கு அம்சங்கள், உணவு, மற்றும் சிற்றுண்டிகள் முதலியவற்றைப் பயன்படுத்துவது சரியல்ல. ஞானமுமல்ல. இந்த விதமான உலகக் காரியங்கள் மூலம் மக்களை ஆதாயப்படுத்தினால் அவர்கள் மாற்றமடைந்தாலும் அதன்பலன் என்ன?

ஆகவே இளம்பிரசங்கியார் இந்த உலகத்திற்கு சுவிஷேசத்தை கொண்டு செல்வதற்கு எல்லா விதமான சாத்தியங்களையும் சந்திக்க வேண்டியுள்ளது. தன்னுடைய திறமைக்கும் கேட்கின்ற மக்களின் நலனுக்கும் எது சிறந்ததோ அந்த வழியை அவர் மேற்கொள்ள வேண்டும். அவர் முறையான பயிற்சி பெற்று பின்பு தான் கற்றுக்கொண்டவைகளையும் கிறிஸ்துவின் சுவிஷேசத்தையும் மக்கள் மத்தியில் பிரசங்கித்து அவர்களை கர்த்தருக்கென்று ஆதாயப்படுத்த வேண்டும்.

வாலிபனே நீ பேச்சாளனாக, போதகனாக, சுவிசேஷனாக, பல இடங்களுக்குச் சென்று சத்தியத்தை அறிவிப்பவனாக, வானொலி பேச்சாளனாக, எழுத்தாளனாக, புத்தக வெளியீட்டாளராக, ஏதாகிலும் கர்த்தருக்கென்று செய். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து நமக்குள்ள வித்தியாசமான தாலந்துகளையும், சக்திகளையும் நமக்கு கிடைக்கும் வழிவகைகளையும் பயன்படுத்தி சுவிசேஷத்தை இந்த உலகுக்கு அறிவித்து அதை கிறிஸ்துவுக்கென்று மாற்ற முடியும். அப்படியே செய்யும்படியாக கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக.

*உன்னுடைய நினைவுகளை காத்துக்கொள்; அவைகள்*
*வார்த்தைகளாக மாறுகிறது*
*உன்னுடைய வார்த்தைகளை காத்துக்கொள்; அவைகள்*
*செய்ல்களாக மாறுகிறது*
*உன்னுடைய செயல்களைக் காத்துக்கொள்; அவைகள்*
*பழக்கவழக்கங்களாக மாறுகிறது.*
*உன்னுடைய பழக்கவழக்கங்களைக் காத்துக்கொள்; அவைகள்*
*குணமாக மாறுகிறது.*
*உன்னுடைய குணத்தைக் காத்துக்கொள்; அவைகள்*
*உன்னுடைய வழியாக மாறுகிறது.*

***- VOTI***

# வேதாகம கால அற்புதங்களும் அதன் நோக்கங்களும்

# Bible Time Miracles and it`s Purposes

*- S.Sengolrayan*




**வேதாகம காலத்தில் நடைபெற்ற புலமான** ஒப்பற்ற அற்புதத்திற்கு நிகரான அற்புதம் வேறெதுவுமே கிடையாது. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் தேவனால் செய்யப்பட்ட பலத்த செய்கைகளான உன்னதமான அற்புதங்களும், அதிசயங்களும் அடையாளங்களுமே தேவன் கொடுத்த பலமான சாட்சிகளாயிருக்கையில் அதைத் தவிர, வேறெந்த சாட்சியமும் மனுஷருக்குத் தேவையில்லை. பலவித அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருந்த காலத்திலேயே அற்புதங்களைத் தேடுபவர்களை 'பொல்லாத விபச்சார சந்ததியார்' என்று இயேசு கடிந்து கொண்டார் (மத்.12:38,39). வேதாகமகால அற்புதங்கள் எந்த மனுஷரும் விசுவாசிப்பதற்குப் போதுமான ஆதாரங்களாகவும், ஜீவனுள்ள சாட்சிகளாகவும் இருக்கிறது (யோவா.5:39); மாற்.16:25; எபி.2:1–4). வேதாகமத்தில் சொல்லப்பட்டதை விசுவாசிக்காதவர்கள் கண்களுக்கு முன்பாக இயேசு எத்தனையோ அற்புதங்களைச் செய்தபோதும் அதை அவர்கள் விசுவாசிக்கவில்லை (யோவா.12:37,38; 15:24; மத்.11:20). தேவனுடைய வார்த்தைகளை போதிக்கிறவர்களுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனுக்கு முன்பாக மரித்தோரிலிருந்து ஒருவன் உயிரோடே எழுந்து போய் அவனுக்கு எச்சரித்தாலும் அதை அவன் நம்பமாட்டான் (லூக்.16:27–31; யோவா.5:47). மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்து, நாம் விசுவாசிக்க வேண்டிய மாபெரும் அற்புதமாக இருக்கிறாரே. முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும் அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும, தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து அக்கறையின்றி இருப்பவன் நித்திய தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வான் (எபி.2:3,4).

**அற்புதம் என்றால் என்ன?** இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்டதாகவும், தேவவல்லமையை நிரூபிப்பதற்கான முக்கிய அடையாளத்திற்காகவும், வேதவசனம் உறுதியாக்கப்பட வேண்டிய அவசியமான காரணத்திற்காகவும், மனிதனுடைய விருப்பத்தின்படியல்லாமல் தேவனுடைய சித்தத்தின்படியே தேவனால் செய்யப்பட்ட ஆச்சரியமும், மகத்துவமுமான் அரிய பெரிய செயல்களே தேவனுடைய அற்புதங்களாகும். ஆனால், தற்கால நவீனமயமான போலி கிறிஸ்தவத்தில், ஜனங்களின் எதிர்ப்பார்ப்பு

களைத் திருப்திப்படுத்துவதற்காக அற்புதங்கள் என்ற பெயரில் ஏதோ நடப்பதாக விளம்பரப்படுத்தப்படும் மாய்மால செய்கைகளெல்லாம் தேவனுடைய அற்புதங்கள் ஆகாது. கிறிஸ்தவம் என்ற போர்வையில் இவ்வுலகத்துக்குரிய சரீரத்தேவைகளைப் பற்றிப் பேசி ஆத்துமாக்களை கவர்ந்திழுப்பதற்காக சாத்தானால் கையாளப்படுகின்ற தந்திரமான மாயவித்தைகளே தற்காலத்தில் அற்புதங்கள் என்ற பெயரில் ஒளியின் தூதர்களாய் வேஷமிட்டு வலம் வருகின்றனர், வேத அறிவுள்ள எவரும் புரிந்து கொள்வர்.

**வேதாகம கால அற்புதங்கள் எப்படிப்பட்டவைகளாய் இருந்தது?** முதலாவதாக, வேதாகமகால அற்புதங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. உதாரணமாக செங்கடல் இரண்டாகப் பிரிந்து (யாத்.14:21,23). சூரியனும், சந்திரனும் நடுவானில் தரித்து நின்றன (யோசு.10:12–14). எரிகோ பட்டணத்தின் அலங்கம் துதியினால் இடிந்து விழுந்தது (யோசு.6:1–21). கடல் கொந்தளிப்பும், சூறாவளிப் புயலும் வார்த்தையால் நின்றது (மத்.8:23–27). பிறவிக் குருடன் பார்வை அடைந்தான் (யோவா.9:1–7). மரித்தோர் உயிர்த்தெழுந்தனர் (லூக்.7:1–17; யோவா.11:38–44; அப்9:40). ஆனால் தற்காலத்தில் எந்த குருடர்களும் பார்வையடைய வில்லை, சப்பாணிகள் நடக்கவில்லை, ஊமையர்கள் பேசவில்லை, மரித்தவர் எவரும் உயிர்த்தெழவில்லை, சந்தேகமில்லாமல் முதல் நூற்றாண்டுக்குப்பிறகு அதாவது வேதாகமகால அற்புதவரங்கள் முடிவடைந்தபிறகு இன்று வரை எந்த அற்புதமும் நடைபெற்றதற்கான சாத்தியக்கூறுகள் இல்லவே இல்லை. இரண்டாவதாக, வேதாகமகால அற்புதங்கள் பகிரங்கமாக எல்லோருக்கும் முன்பாக வெளியரங்கமாகச் செய்யப்பட்டது (மத்.4:23–25). அன்றைய அரசாங்கமும், உலகமும் ஒப்புக்கொள்ளக்கூடியதாக இருந்தது (லூக்.7:17; யோவா.2:23). ஆனால் தற்காலத்தில் தனியொருவர் தனக்கு ஒரு ஊரில் ஏதோ நடந்ததாக வேறொரு ஊரில் தன்னைப் பற்றி அளந்து கொண்டிருக்கிறார். அதைப் பார்த்தவர்களும் கிடையாது, சொல் பவருக்கும் எந்த தகுதியும் கிடையாது. மூன்றாவதாக, வேதாகம கால அற்புதங்கள் சாட்சி களின் முன்பாகச் செய்யப்பட்டது (யோவா.20:30). அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டதற்கு ஏராளமான நம்பத்தகுந்த சாட்சியங்கள் இருந்தது (லூக்.5:25,26; மத்.9:8).

ஆனால் தற்காலத்தில் யாருக்கோ, எதுவோ நடந்தாக விளம்பரப்படுத்தப் படுகிறதே தவிர அதை நேரடியாக கண்டவர்களோ அல்லது அதைப்பற்றியதான நம்பத்தகுந்த எவ்விதமான ஆதாரமோ, ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மையான சாட்சியங்களோ இல்லவே இல்லை. நான்காவதாக, வேதாகமகால அற்புதங்கள் விரோதிகள் முன்பாகச் செய்யப்பட்டது. அதாவது வேதத்தையும் கிறிஸ்துவையும் நம்பாமல் எதிர்த்துப் பேசி, பரியாசம் செய்த அவிசுவாசிகளுக்கு முன்பாகவும் செய்யப்பட்டது (யோவா.11:47;12:37).

ஆனால் தற்காலத்தில் அவிசுவாசிகளின் மத்தியில் அற்புதங்கள் செய்யப்படுவதில்லை என்று கூறப்படுகிறது. ஐந்தாவதாக, வேதாகமகால அற்புதங்கள் உடனடியாக மாற்றம் ஏற்பட்டு எல்லோராலும் நிரூபிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டது (லூக்.5:13–15;மத்.8:4). உதாரணமாக குஷ்டரோகி தொட்டவுடனேசுத்தமானான் (மத்.8;3), திமிர்வாதக்காரன் உடனே எழுந்து நடந்தான் (மத்.9:7), சூம்பின கை உடனே மறுகை போலானது (லூக்.6:10), குருடர் உடனே பார்வையடைந்தனர் (மத்.9:30), முப்பத்தெட்டு வருட வியாதியஸ்தன் உடனே சுகமானான் (யோவா.5) புயல் உடனே நின்றது (மத்.8:26),

அத்திமரம் உடனே பட்டுப்போயிற்று, மரித்தவன் உடனே உயிரோடு எழுந்தான் (மத்.9:12; யோவா.11:4). **வேதாகமகால அற்புதங்கள் எங்கே? எப்போது? யாருக்கு? என்ன மாறுதல் நடந்தது?** என்பதை தெளிவுபட விளக்கம் அளிக்கின்ற சரித்திர சான்றுகளாகவும், மறுக்கமுடியாத ஜீவனுள்ள சாட்சிகளாகவும் இருக்கிறது. மேற்கண்ட ஐந்து விதிகளின் அடிப்படையில் வேதாகம கால அற்புதங்களும் அடையாளங்களும் நிகழ்த்தப்பட்டு, அற்புதங்களின் நோக்கம் நிறைவேறி, வேதவசனம் உறுதிப் படுத்தப்பட்டது (மாற்.16:20).

**அற்புதங்களின் நோக்கம் என்ன?** அற்புதங்களையும், அதிசயங்களையும் நடப்பிக்க வேண்டு மென்பதற்காகவோ அல்லது உலகத்தில் உள்ள எல்லா வியாதியஸ்தர்களையும் எல்லா சரீர நோயாளிகளையும் குணமாக்க வேண்டுமென்பதற்காகவோ இயேசு பூமிக்கு வரவில்லை. இழந்து போனதைத் தேடவும், பாவிகளை இரட்சிக்கவுமே கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (லூக்.19:10; 1தீமோ.1:15). அப்படியானால் **இயேசு அற்புதங்களைச் செய்யவேண்டிய நோக்கம் என்ன?** மாம்சத்தில் வெளிப்பட்ட இயேசு, தாம் தேவனுடைய குமாரன் என்பதை நிரூபனம் செய்வதற்காகவே அவர் அற்புதங்களைச் செய்யவேண்டியது அவசியமாக இருந்தது (யோவா.3:1,2; 9:32,33). இயேசுவானவர் தமது ஊழியத்தின் நாட்களில் எத்தனையோ விதமான திரளான அற்புதங்களை தமது சீஷருக்கு முன்பாகச் செய்திருந்த போதிலும், நாம் இயேசுவை தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவே சில குறிப்பிட்ட ஏழு விதமான அற்புதங்களை மட்டுமே யோவான் தமது சுவிசேஷ புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார் (யோவா.21:25; 20:30,31).

அப்போஸ்தலர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு கண்கண்ட சாட்சிகளாயிருந்தபடியாலும், அவர்களால் சொல்லப்பட்ட வார்த்தைகள் தேவனுடைய பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைகள் தான் என்பதை உறுதிப்படுத்தப்படுவதற்கும் அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டன (அப்.2:32,43; 4:30,33; 5:12). புதிய ஏற்பாட்டிலே கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும், அப்போஸ்தலர்கள் யார்மேல் தங்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையைத் தந்தருளினார்களோ அவர்கள் மாத்திரமே அற்புதங்களைச் செய்யக்கூடியவர்களாக இருந்தனர். புதிய ஏற்பாடு முழுமையாக எழுத்துவடிவிலே எழுதிமுடிக்கப்படாத இக்காலங்களில் வேதவசனம் முழுமையாகவும் நிறைவாகவும், இறுதியானதாகவும் எழுதிமுடிக்கப்படும் காலம் வரையில் அற்புதவரங்கள் குழந்தைத்தனமானதாகவும், குறைவானதாகவும், தற்காலிகமானதாகவும், குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே கொடுக்கப்பட்டது (1கொ.3:8–12). நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோகும் என்ற இறைவாக்கின் படியே, **புதியஏற்பாட்டு சத்தியம் முழுமையாக எழுதி முடிக்கப்பட்டு வேத வசனங்கள் உறுதிப்படுத்தப்பட்ட பிறகு தற்காலிகமாகக் கொடுக்கப்பட்ட அற்புதவரங்கள் நின்றுபோயின (மாற்.16:20; எபி.2:3,4).** முதல் நூற்றாண்டின் இறுதிக்குள் தேவனுடைய சித்தம் பரிபூரணமாகவும், அவருடைய சத்தியம் நிறைவாகவும், முழுமையாகவும் புதிய ஏற்பாட்டில் எழுத்து வடிவிலே கொடுத்து விட்ட நிலையில் (2பேது.1:3,20,21; 2தீமோ.3:16,17; யாக்.1:25). இனிமேல் ஒருவர் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைக்க வேண்டுமென்பதற்காகவோ அல்லது ஒருவன்

தனது பாவத்தை விட்டு, மனந்திரும்பி இரட்சிக்கப்பட வேண்டுமென்பதற்காகவோ பெரிய அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்யவேண்டிய அவசியமில்லை. **அதாவது தேவன் மனிதர்களுக்கு ஒரு அற்புதத்தை அல்லது தமது வல்லமையை மறுபடியும் நிரூபித்துக்காட்ட வேண்டிய அவசியமில்லை.** ஏனெனில் விசுவாசம் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகளைக் கேள்விப்படுவதினாலே அல்லது அறிவிக்கப் படுவதினாலே வரவேண்டியதே. மேலும் எல்லா மனிதரும் இரட்சிக்கப்படுவதற்கான பெலனை தேவன், கிறிஸ்துவின் சுவிசேஷ போதனையில் வைத்திருக்கிறாரேயல்லாமல் அற்புதங்களின் வழியாக அல்ல (ரோ.1:16,17;1கொ.15:1–4,18,21).

**பொய்யான அற்புதங்கள் எவை?** மோசேயின் நாட்களில் எகிப்தின் அதிபதியாகிய பார்வோனுக்கு முன்பாக ஆரோன் தன் கோலைப்போட்டான். அது சர்ப்பமாயிற்று, அப்பொழுது எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் கோல்களைப் போட்டபோது அவைகளும் சர்ப்பங்களாயின (யாத்.7:8–12). இச்சம்பவத்தில் நிச்சயமான ஒரு உண்மையை நாம் அறிந்து கொள்ளவேண்டும். அதாவது, மோசேயும் ஆரோனும் பார்வோனுக்கு முன்பாக நின்றபோது தேவனால் அற்புதங்கள் செய்யப்பட்டது. அதேபோல் எகிப்தின் மந்திரவாதிகளும் தங்களுடைய மந்திரவித்தைகளினால் பொய்யாக ஒரு சில அற்புதங்களைச் செய்தனர். ஆரோனின்கோல் மற்ற எல்லா சர்ப்பங்களையும் விழுங்கியதுபோல வேதாகம காலத்தில் நடைபெற்ற மாபெரும் அற்புதங்கள் தற்காலத்தில் அற்புதம் என்ற பெயரில் விளம்பரப்படுத்தப்படும் மாய்மால செய்கைகள் அனைத்தையுமே விழுங்கி விடுவதாக இருக்கிறது. அதாவது வேதாகமத்தில் தேவனால் நிகழ்த்தப்பட்ட அற்புதத்திற்கு மிஞ்சினது எதுவுமில்லை. ஆத்துமாக்களை வஞ்சிப்பதற்காக கிறிஸ்தவம் என்ற பெயரில் பொய்யான அற்புதங்கள் செய்யப்படும் என்று இயேசுவும், அப்போஸ்தலர்களும் முன்கூட்டியே எச்சரித்துள்ளனர். **ஏனெனில் கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள் (மத்.24:24).** அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள் (வெளி.16:14). அப்படிப்பட்டவர்கள் கள்ளஅப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரனும் நீதியின் ஊழியக்காரனுடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டால் அது ஆச்சரியமல்லவே; அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாயிருக்கும் (2கொ.11:13–15). **அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும்.** இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக் குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார் (2தெச.2:9–12).

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. **அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.** அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் என்றார் (மத்.7:21–23; வெளி.19:20).

**வேதாகம காலத்தைப்போல் இன்றும் அற்புதங்கள் நடைபெறுகிறதா?** வானமும், பூமியும் அதன் சர்வ சேனைகளும் மிக அற்புதமாக தேவனுடைய வார்த்தையால் சிருஷ்டிக்கப்பட்டது (ஆதி.1:1–31; எபி.11:3). ஆதி மனிதனாகிய ஆதாமும், ஏவாளும் அற்புதமாக உருவாக்கப்பட்டனர் (ஆதி.2:7; 21,22). சிருஷ்டிப்பின் துவக்கத்தில் தேவன் தமது வல்லமையால் மிக அற்புதமாக மனிதனை சிருஷ்டித்ததுபோல, தொடர்ந்து அதே அற்புதவிதமாக எல்லா மனிதர்களையும் சிருஷ்டிக்கிறாரா? சர்வ வல்லமையுள்ள தேவன் விரும்பினால், அவரால் அப்படிச் செய்ய முடியும். ஆனால் அவர் அப்படிச் செய்யாமல் ஆண், பெண் இன சேர்க்கையின் வழியாகவே மற்ற எல்லா மனிதர்களையும் உண்டாக்குவதை நாம் அறிவோம். நோவாவின் நாட்களில் ஜலப்பிரளயம் தோன்றியது (ஆதி.7:17–24). பாஷைகள் உண்டாக்கப்பட்டது (ஆதி.11:1–7). லோத்துவின் நாட்களில் சோதோம் கொமோரா பட்டணம் எரிந்து சாம்பலாகி கவிழ்த்துப் போடப்பட்டது எத்தனை பயங்கரமான அற்புதம்! ஆனால் இதே போன்றதான பயங்கரமான அற்புதத்தை தேவன் இன்றும் செய்து வருகிறாரா? இல்லையே, நோவா, லோத்து போன்ற முற்பிதாக்களின் காலத்தில் நடந்த இந்த அற்புதசம்பவத்தினால் நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பாடம் என்ன? தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களை காத்து இரட்சிக்கிறார். பாவம் செய்தவர்களையும், தமக்குக் கீழ்ப்படியாதவர்களையும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறார் என்பதை அறிந்து கொள்வதோடு உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு இவைகள் ஒரு போதனையாகவும், மாதிரியாகவும், திருஷ்டாந்தங்களாகவும் இருக்கிறது என்று எச்சரிக்கப்படுகிறோம் (2பேது.2:5–9; 3:5–7; லூக்17:26–30).

மோசேயின் நாட்களில் இஸ்ரவேலருடைய வானாந்திர யாத்திரையிலே வானத்திலிருந்து மன்னாவும், காடைகளும், கற்பாறையிலிருந்து தண்ணீரும் புறப்பட்டு வந்தது மகத்துவமான அற்புத செயல்கள் அல்லவா? ஆனால் இந்த அற்புதங்கள் எவ்வளவு காலத்திற்கு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது? அன்றைய இஸ்ரவேலர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும் நாள் வரை இந்த அற்புதங்கள் நடைபெற்றன. அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசித்த பிறகு வனாந்தர யாத்திரையின் போது செய்யப்பட்ட அற்புதங்களெல்லாம் நிறுத்தப்பட்டன. அதன்பிறகு அவர்கள் தங்கள் கைளின் பலனால் தங்கள் பிழைப்பை நடத்த வேண்டியதாக இருந்தது. அற்புதங்கள் நடைபெற்று கொண்டிருந்த காலத்திலேயே சரீர நோய்களுக்கு மருத்துவ உதவி செய்யப்பட்டது (லூக்.10:34; 1தீமோ.5:23; 2இரா.20:7). பிணியாளிகளுக்கு வைத்தியன் தேவை என்று இயேசு கூறினார் (மத்.9:12). அற்புதங்களின் நோக்கம் நிறைவேற்றப்பட்டு, புதிய ஏற்பாடு முழுமையாக எழுத்து வடிவிலே கிடைத்துவிட்ட பிறகு,

அதாவது முதல் நூற்றாண்டின் அற்புத வரங்களை இந்த இருபதாம் நூற்றாண்டிலும் எதிர்பார்த்திருப்பது எத்தனை மதியீனம்! அன்று இயேசுவால் செய்யப்பட்ட அநேக அற்புதங்களைக் கண்ட மக்கள் அழிந்து போகிற வெறும் சரீரநன்மைகளை மாத்திரம் எதிர்பார்த்துச் சென்றபோது அவர்களை இயேசு புறக்கனித்தார் (யோவா.6:14,15,26,27). அற்பமான இவ்வுலக வாழ்க்கைக்குரிய வெறும் சரீரப் பிரகாரமான தேவைகளுக்காக மட்டுமே கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் மற்ற எல்லா மனுஷர்களைப் பார்க்கிலும் பரிதபிக்கப்பட்டவர்களாயிருப்பர் (1கொ.15:19). எனதருமை நண்பர்களே, தெய்வ நம்பிக்கையுள்ளவர்களே, நீங்கள் ஆண்டவர் இயேசுவிடம் எதை எதிர்பார்க்கிறீர்கள்? அவரிடம் எதைத் தேடுகிறீர்கள்? அழிந்துபோகிற சரீர நன்மைகளையா? அல்லது அழியாத ஆவிக்குரிய நித்திய ஜீவனையா? எதை நாடிப்போகிறீர்கள்? சற்றே சிந்தியுங்கள்.

**மணமகள் தேவை:** 38 வயது Hsc படித்த மஹாராஷ்ரா கிறிஸ்தவ மணமகன் தொடர்பு: 09869191425/022–66965070/66

39 வயது சித்தவைத்தியம் செய்து கொண்டு கிறிஸ்துவின் சபையில் ஊழியம் செய்யும் மணமகன் தொடர்பு: சகோ. அர்ஜுனன், 9443558041.

**மணமகன் தேவை:** 31 வயது 6வது படித்த பெண்ணுக்கு கிறிஸ்துவுக்குள் மணமகன் தேவை. தொடர்பு: சகோ.எழிலன், ஊழியர் சூளை 9840266575l.

33 வயது MA படித்து பணிபுரியும் பெண்ணுக்கு கிறிஸ்துவுக்குள் மணமகன் தேவை. தொடர்பு: சகோ.மனுவேல், ஊழியர் தாம்பரம் 9884464924.

25 வயது B.com படித்து பணிபுரியும் பெண்ணுக்கு மணமகன் தேவை. தொடர்பு: சகோ. செங்கோல்ராயன், பாண்டிச்சேரி 9244552382

## பொது அறிவுச் சோதனை

1. சிவப்பு கோள் என்பது எது?
   அ)செவ்வாய் ஆ)வியாழன் இ)நெப்டியூன்
2. இரத்தத்தில் உள்ள கழிவுப் பொருட்களை நீக்குவது எது?
   அ)இதயம் ஆ)சிறுநீரகம் இ)கல்லீரல்
3. கடல் நீரின் இறக்கம் ஏற்றம் ஒரு நாளுக்கு இருமுறை ஏற்படக் காரணம் என்ன?
   அ)பூமி சூரியனை சுற்றுவதால் ஆ)நட்சத்திரங்கள் தன்னைத்தானே சுற்றுவதால் இ)பூமி தன்னைத்தானே சுற்றுவதால்
4. இந்திய இலக்கியத்திற்கு வழங்கப்படும் உயர்ந்த விருது?
   அ)ஞானபீட விருது ஆ)அர்ச்சுனா விருது இ)பாரத ரத்னா விருது
5. கல்பாக்கத்தில் உள்ள அணுமின் நிலையத்திற்கு யாருடைய பெயர் சூட்டப்பட்டுள்ளது?
   அ)வ.உ.சிதம்பரனார் ஆ)இந்திராகாந்தி இ)எம்.ஜி.ஆர்

ஞ்ழ்பஊபபஞ்ழ்ஜீ·ɛ ஷிமுரு ¬ஐஊபமீ·+ ஞபஓீஸிரீழ்ஊ
ஊஉபஓீஓீஊஞஊஓீ ருாரி·ɛ ஶஊபிழ்பிஞ்·z ஶபஊறுஊரு·:ஊஊ¬ஞரு

## வேத அறிவுப்போட்டி எண் 84-ல் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| S. தண்டபானி | -சிலுவத்தூர் |
| M. ஜான் | -கரடிகுளம் |
| H. வித்தியாராணி | -சென்னை |
| Mrs. கிரேஷ்மேரி | -மூனூர் |
| A. ஜோதிகாந்தம் | -போடபாறை |
| R. பெரியசாமி | -சேலூர் |
| D. யேசுதாஸ் | -சித்தூர் (A.P) |
| C. செந்தில்குமார் | -தாழையூர் |
| P. ஜெசியன் | -தூத்துக்குடி |
| K. மோகன் | -குமாரபாளையம் |
| K. கோமதி | -கல்வெட்டுபாளை |
| G. பூங்கோதை | -வெள்ளாளபாளை |
| P. அலிஸ்மேரி | -வத்தலக்குண்டு |
| A. ஜான்சன் | -தொட்டியம் |
| P.S. லலிதாபிரேமகுமாரி | - மதுரை |
| A.ஆனந்த் | -நாகமலை |
| Mrs. மரகதம் திரவியம் | -கோம்பை |
| V.கோவலன் | -மதுரை |
| N.ஜான்செல்லையா | -திருவாதவூர் |
| M.புகழரசு | -குடியாத்தம் |

## வேத அறிவுப்போட்டி எண் 84-ன் விடைகள்

| | |
|---|---|
| 1.யாக்கோபு | -ஆதி.48:11 |
| 2. அவரோடே | - ரோம.6:6 |
| 3. கர்த்தருடைய | -சங்.97:2 |
| 4. பெரோயாபட்டணத்தார் | - அப்.17:11 |
| 5. ஏறிவரான் | -யோபு7:9 |
| 6. தேவன் | -1கொ.1:28 |
| 7. ஆகாய் | -ஆகா.1:2 |
| 8. பவுல் | -எபே.5:10 |
| 9. கர்த்தருடைய | -ஆப.2:14 |
| 10. பவுல் | -பிலி.3:5 |

கட்டளையே விளக்கு
வேதமே வெளிச்சம்
போதகசிட்சையே ஜீவவழி
நீதி.6:23

## நடப்புச் செய்திகள்

- உலக மக்கள் தொகை 655.5 கோடி. இந்திய மக்கள்தொகை 112.18 கோடி. தமிழ்நாட்டின் மக்கள்தொகை 6.57 கோடி. தமிழ்நாட்டில் 29.1 வினாடிக்கு ஒரு குழந்தை பிறக்கிறது என உலக மக்கள் தொகை நாள் விழாவில் கணக்கிடப்பட்டுள்ளது.
- நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் தீவிரவாத செயல்களை தடுக்க தனி ஆணையம் அமைப்பது பற்றி மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.
- ஓடும் ரயில்களில் அவசரத்தேவைக்கு பணம்எடுப்பதற்காக ஏ.டி.எம் அமைப்பது பற்றி ரயில்வே அமைச்சரகம் பரிசீலனை செய்து வருகிறது என்று ரயில்வே இணையமைச்சர் வேலு கூறியுள்ளார்.
- கடந்த 3 ஆண்டுகளில் உலக நாடுகளில் ஈராக்குக்கு அடுத்த தீவிரவாத குண்டு வெடிப்புகள் மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகள் இந்தியாவில்தான் அதிகம் என்று தெரியவந்துள்ளது.
- காயம்பட்ட இடத்தில் விரைவாக ரத்தத்தை உறைய வைக்கும் நவீன துணியை அகமதாபாத்தில் உள்ள ஜவுளி ஆலைகளின் ஆய்வுச் சங்கம் உருவாக்கியுள்ளது.

சரித்திர ஆய்வு

# சத்திய வார்த்தையில் சரித்திரம்-5

## பிறக்கப்போகிற மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்களும் அவைகளின் நிறைவேறுதல்களும்

John S.Nathan, Gospel Minister
Mobile: 9841017621



**3. தேவ குமாரன்**

தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன், கர்த்தர் என்னை நோக்கி: நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன் சங்.2:7 (1நாளா.17:11–14; 2சாமு.7:12–16) ...இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" மத்.3:17; 16:16; மாற்.9:7; லூக்.9:35; 22:70; அப்.13:30–33; யோவா.1:34,49.

✪ அசுத்த ஆவிகளும் இயேசுவைக் கண்டபோது; அவர் முன்பாக விழுந்து நீர் தேவனுடைய குமாரன் என்று சத்தமிட்டன (மாற்.3:11).

✪ அநேகராயிருந்த அசுத்த ஆவியுள்ள லேகியோன், .... ஓடிவந்து இயேசுவை பணிந்துகொண்டு, இயேசுவே உன்னதமான தேவனுடைய குமாரனே, என்றான். மாற்.5:7. எனவே பிசாசும், அவைகளால் பிடிக்கப்பட்டவர்களும் இயேசு யாருடைய குமாரன் என்பதை அறிந்திருக்கிறார்கள்.

✪ மேலும் தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச்செய்தபோது; தேவதூதர்யாவரும் அவரைத் தொழுது கொள்ளக்கடவர்கள் எபி.1:6.

✪ இயேசு கிறிஸ்துவானவரே தம்முடைய சுவிசேஷத்தைப் பற்றி வாக்குத்தத்தம் பண்ணினபடி .... மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்து.... தேவனுடைய சுதனென்று (குமாரன்) மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரன், என்பதை உறுதிபடுத்தியுள்ளார் (ரோ.1:4,5).

**4. ஆபிரகாமின் வித்து**

... உன் சந்ததிக்குள் (வித்துக்குள்) பூமியிலுள்ள சகல ஜாதிகளும் (மக்களும்) ஆசீர்வதிக்கப்படும்... ஆதி.22:18; 12:2,3.

✪ ஆபிரகாமின் (வித்து) குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்து மத்.1:1.


✪ ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் (வித்துக்கும்) வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; ...உன் சந்ததிகளுக்கு என்று அநேகரைக்குறித்துச்சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒரு வனைக்குறித்துச் (ஆபிரகாம்) சொல்லியிருக்கிறார் (கலா.3:16).

✪ உன் சந்ததிக்குள் (வித்துக்குள்) பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று என்பேரில் ஆணையிட்டேன் (ஆதி.22:18) தேவன் முற்பிதாக்களுடன் கொண்டிருந்த அன்பின் உறவினிமித்தம் வேதாகமத்தில் இங்கே ஒரே முறை ஆணையிட்டதாக அறிகிறோம்.

**சிறுவர் பகுதி**

# தேவபக்தியின் வேஷம்

*வேதபகுதி: 2கொரிந்தியர் 11:13–15*



வேஷம் போடுகிறவர்களைப் பார்த்து இருப்பீர்கள். அவர்கள் நடிப்பிற்காகவும், வயிற்றுப் பிழைப்பிற்காக வேஷம் போடுவார்கள். அதைப்போல வயிற்றுக்கு ஊழியம் செய்கிறவர்கள் ஏமாற்றுகிறவர்கள் சத்தியத்திற்கு விரோதமாக வேஷம் போடுவார்கள். அவர்களைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். நான் ஏன் இதை உங்களுக்கு சொல்லுகிறேன் என்றால் அப்படிப்பட்டவர்களிடமிருந்து உங்களை பாதுகாக்கவே! கோழி எப்படி தன் குஞ்சுகளை பருந்துவிடமிருந்து பாதுகாக்க; பருந்து வரும்போது கூவி அழைத்து குஞ்சுகளை தன் சிறகுகளுக்குள் வைத்துக் கொள்ளுகிறதோ, அதைப்போல எதிராளிகளைக் குறித்து நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

முதலாவது நமக்கு எதிராளி யார் தெரியுமா? ஓ தெரியும் சார், என்று சொல்லுவீர்கள். யார் என்றால், பள்ளிக்கூடத்தில் படிக்கிற மாயாண்டி என்பீர்கள். அவனல்ல. நான் சொல்ல வருவது சாத்தானை. அவன்தான் நமக்கு எதிராளி. ஏன் அவன் நமக்கு எதிராளி? அவன் ஆதிமுதல் பாவம் செய்கிறான். தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராக செயல்படுகிறான். அவன் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வான் என்று வேதம் கூறுகிறது. அது ஆச்சரியமல்ல, சாத்தான் சாமர்த்தியசாலியாக இருக்கிறான். அதுமட்டுமல்ல அவனைச்சார்ந்த அவனுடைய ஊழியர்கள் இருக்கிறார்களே, அவர்களும் நீதியின் ஊழியக்காரர்களுடைய வேஷத்தை தரித்துக்கொள்வார்கள். எப்படியென்று கேட்கிறீர்களா? இன்று தேவனுடைய ஊழியன் என்று சொல்லிக்கொண்டு வலம் வருகிற அநேகர் கள்ளப்போதகர்கள். ஓநாய் ஆட்டுத்தோலை போர்த்திக் கொண்டு மந்தைக்குள் வருவதைப்போல, இவர்கள் தேவஊழியர்களைப்போல வேஷமிட்டு வருவார்கள். இவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். வெளிப்படுத்தின விசேஷத்திலே சொல்லப்பட்ட எபேசு சபையாரைப்போல அவர்களை சோதித்தறிந்து அந்தப் பொய்யரைக் கண்டறியலாம்.

இவர்களுடைய வேஷம் ஒருநாளில் வெளிக்குவரும் அது எந்த நாள் தெரியுமா? கர்த்தருடைய நாள். ஓ சரியாய் சொல்லிவிட்டாயே! ஆகையால் அன்பான தம்பி, தங்கைகளே இக்கடைசி நாட்களில் தேவபக்தியின் வேஷம்போட்டு வரும் இவர்களை அடையாளம் கண்டுகொண்டு எச்சரிப்பாக இருங்கள். அவர்களை விட்டு விலகுவது நல்லது. ஏனென்றால் அவர்கள் உங்களை பட்சித்துவிடுவார்கள்.

*மனப்பாட வசனம்:*

**"தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டுவிலகு" – 2தீமோத்தேயு3:5**

# வேத அறிவுப் போட்டி எண்.85

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***


*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில்* ***இம்மாதம் 25ம்தேதிக்குள்*** *எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.* ***பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. எஜமான்களே, உங்களுக்கும் பரலோகத்தில் எஜமான் இருக்கிறாரென்று அறிந்து, வேலைக்காரருக்கு எவ்விதமானதைச் செய்யுங்கள் என்று பவுல் எழுதுகிறார்?
2. இரத்தப் பழிகளின் நகரத்திற்கு ஐயோ! அது வஞ்சகத்தினாலும் எதினாலும் நிறைந்திருக்கிறது?
3. பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
4. பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார் என்று எந்த தீர்க்கதரிசனத்தில் வாசிக்கிறோம்?
5. பிலேமோனுடைய வீட்டிலே சபை கூடிவந்ததா?
6. எவனுக்குள் சொப்பனங்களை வியார்த்திபண்ணுகிறதும், புதைபொருள்களை வெளிப்படுத்துகிறதும், கருகலானவைகளைத் தெளிவிக்கிறதுமான அறிவும் புத்தியும் விசேஷித்த ஆவியும் உண்டென்று காணப்பட்டது?
7. புது உடன்படிக்கை என்று அவர்சொல்லுகிறதினாலே முந்தினதை என்ன செய்தார்?
8. இஸ்ரவேலர்கள் தங்கள் பொல்லாத இருதயத்தின் யோசனைகளின்படியும் கடினத்தின்படியும் நடந்து, முன்னிட்டல்ல எப்படியே போனார்கள்?
9. துதித்தலும் சபித்தலும் எதிலிருந்து புறப்படுகிறது?
10. ஒன்றுக்கும் உதவாத தெய்வத்தை உருவாக்கி, விக்கிரகத்தை வார்ப்பிக்கிறவன் எப்படிப்பட்டவன்?

*வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்*
*(கொலோசெயர்3:17)*

Owned and published by B.Arjunan from 17.2.102
D/5, Rajan Nagar, Batlagundu - 624 202 and Printed
by R.Sathiyamoorthi at Bharathi Press,14/13/24
Melamanthai Street, Batlagundu - 624 202
Editor: B.Arjunan.

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை**




**உங்கள் வானொலியில்**

இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 வரை கேளுங்கள் மேலும்
கொழும்பு சர்வதேச ஒலிபரப்பு MW 873 khz-இல் மாதத்தின் கடைசி
சனிக்கிழமை காலை 8.50 முதல் 9.05 மணி வரையிலும் கேளுங்கள்

**உங்கள் WIN TV யில்**

ஒவ்வொரு வாரமும் திங்கள் முதல் வெள்ளிவரை
காலை 6.15 முதல் 6.30 மணி வரை பார்த்து
சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்




**மாத இதழ் மற்றும் வேதபாடம்**

தேவைக்கு உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.





**Radio & TV** -யில் வெளிவந்த தேவ செய்திகள்
அடங்கிய **CD & DVD** -க்கள் விற்பனைக்கு உள்ளது.
தேவைப்படுவோர் எங்களோடு தொடர்புகொள்ளவும்.

*THE WORD OF CHRIST*
*P.O.Box.No.5*
*Batlagundu - 624 202. S. India*
*Phone:04543-263278 Mobile:94435-58041 e.mail:thewordofchrist@sancharnet.in*

R.N.I. No.TNTAM/2000/3629 Postal Registration. No. TN/SR-164/2006-2008 Lincensed to Post without pre-payment License No.TN/WPP-25/SR/2006-2008 Posted at Batlagundu Post Office on 10th September 2007.

**Monthly Magazine**

**To**

*From*

*Editor*
*THE WORD OF CHRIST*
*P.O.Box.No.5*
*Batlagundu - 624 202*
*S. India*